**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 27/2015**
**PW18**

| | | |
|---|---|---|
| Name | : | சந்திரசேகரன் |
| Father's/Husband's Name | : | பெருமாள் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.04.2025
A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றேன். நான் ஏற்கனவே திருவண்ணாமலை மாவட்டம் , வேட்டவலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 22.05.2013 அன்று அந்நிலைய குற்ற எண். 67/2013 சட்டப்பிரிவு 294(b), 323,324 ,506(2) @302 இதசன் படி வழக்கு கோப்பை ஏற்கனவே புலன் விசாரைணை செய்த ஆய்வாளர் சாந்தலிங்கம் மேற்படி வழக்கின் கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார் . அதை நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் . இந்த வழக்கில் சாட்சிகளை விசாரிக்க ஏற்கனவே புலன் விசாரணை செய்த ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை . மேலும் இந்த வழக்கில் 26.05.2013 அன்று வேலூர் சத்துவாச்சாரி தடய அறிவியல் ஆய்வகம் சென்று உதவி இயக்குநர் திரு . ரவிசங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பாண்டிச்சேரி ஜிப்மர் அரசு மருத்துவமனைக்கு சென்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அம்பிகா பிரசாத் பட்ரா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . அன்றே பிரேத பரிசோதனை சான்றிதழ் பெற்றேன் .

அன்றே விழுப்புரம்அரசு மருத்துவமனைக்கு சென்று மரு . மனோஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் என் புலன் விசாரணையை முடித்து அரசு வழக்கறிஞர் கருத்துரை பெற்று எதிரிகள் மீது சட்டப்பிரிவு 302 r/w 34 IPC ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என் புலன் விசாரணையை எனக்கு முன் விசாரணை செய்த ஆய்வாளர் விட்டுச் சென்ற நிலையில் இருந்து மேல் விசாரணை செய்தேன் . விழுப்புரம் மருத்துவமனை மருத்துவர் மனோஜ் என்பவரிடம் விபத்து பதிவேடு நகல் பெற்று ஆய்வு செய்து விசாரணை செய்தேன் . அதில் இறந்துபோன காயம்பட்ட சார்லசை சிகிச்சைக்கு அழைத்து வந்த வேளாங்கண்ணி என்று தெரியவந்தது . அந்த வேளாங்கண்ணி என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் . ஆனால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை . விபத்து பதிவேட்டு நகலில் காயம்பட்டவரை 2 தெரிந்த ஆண் நபர்கள் தன் வீட்டில் தாக்கியதாக பதிவு உள்ளது என்றால் சரிதான் . அந்த 2 ஆண் நபர்கள் யார் என்று விசாரணை செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை . விழுப்புரம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்வதற்கு முன் வேறு எந்த மருத்துவமனைக்காவது சிகிச்சைக்கு சென்றார்களா என்பது குறித்து நான் விசாரணை செய்யவில்லை . பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சார்லசுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த அறிக்கைகள் அல்லது விபத்து பதிவேடு நகலை வாங்கினேனா என்றால் வாங்கவில்லை . பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரணை செய்தபோது ஆயுதங்களை காட்டி இத்தகைய ஆயுதங்களால் மேற்படி காயங்கள் ஏற்படுமா என்று நான் விசாரணை செய்யவில்லை. மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட இறப்பு அறிக்கையை தாக்கல் செய்யவில்லை . விழுப்புரம் அரசு மரு . மனோஜ் என்பவரை நான்தான் விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை கைப்பட பதிவு செய்தேன் . ஜீப்மர் மருத்துவமனையின் மருத்துவர் அம்பிகா பிரசாத் பட்ரா மற்றும் அறிவியல் ஆய்வாளர் ரவிசங்கர் ஆகியோரது குவிமுச 161 வாக்குமூலங்களை நான் எழுதவில்லை. நான் தாக்கல் செய்த 3 குற்ற இறுதி அறிக்கையில் 31.03.2013 அன்று பால்ராஜிம் , சார்லசும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இது சம்மந்தமாக நான் விசாரிக்கவில்லை . நான் பாண்டிச்சேரி ஜீப்மர் மருத்துவமனையில் சார்லசின் விபத்து பதிவேட்டு நகலை வாங்கினேன் என்றும், அதில் அடையாளம் தெரியாத நபர்கள் என்று இருந்ததால் அது வழக்கிற்கு

பாதகமாக இருக்கும் என்று மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல . அதேபோல் வேட்டவலம் மருத்துவமனையிலும் சார்லசின் விபத்து பதிவேட்டு நகலை வாங்கினேன் என்றும் , அது வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் அதை மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல . நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் யாரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . எனது புலன் விசாரணை சந்தேகத்திற்குரியது என்றால் சரியல்ல . நான் எந்த சாட்களையும் விசாரிக்காமல் எந்த புலன்விசாரணையையும் மேற்கொள்ளாமல் இயந்திரகதியாக எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல . கைபற்றப்பட்ட வழக்கு சொத்துகளை கைரேகை நிருபர்களிடம் அனுப்பவில்லை என்றால் சரிதான் . எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மதமில்லை என்றால் சரியல்ல. அடையாளம் தெரியாத எதிரிகள் யாரோ தாக்கிவிட்ட வழக்கில் திட்டமிட்டு எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல .

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**

Additional District Judge,

Tiruvannamalai.